செ.வெ.எண்: 19/2021 நாள்: 10.03.2021

# திருப்பூர் மாவட்டம்.

## வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ராட்சத பலூனை மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் பறக்க விட்டார்.

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி 1-வது மண்டல அலுவலகம் வேலம்பாளையத்தில் இன்று (10.03.2021) தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்-2021 தொடர்பாக திருப்பூர் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் நாளானா ஏப்ரல் 06 ஆம் தேதியை குறிக்கும் வகையிலான ராட்சத பலூனை திருப்பூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் பறக்க விட்டு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் -2021 வருகின்ற 06.04.2021 நடைபெறுவதை முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்ததை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு வகையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்பூர் மாவட்டத்திலுள்ள எட்டு சட்டமன்ற தொகுதிகளிலும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்ததை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு வகையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, கல்லூரிகளில் இளம்வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிக்கும் பொருட்டு மாதிரி வாக்குப்பதிவு நடத்துதல், கடந்த தேர்தல்களில் குறைவாக வாக்குகள் பதிவான வாக்குச்சாவடி பகுதிகளில் உள்ள வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் வழங்குதல் மற்றும் கலைக்குழுவின் மூலம் விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளுதல் ஆகியன செய்யப்பட்டு வருகின்றது. மேலும் 100 சதவீதம் வாக்களிக்க வாக்காளர் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு கல்லூரி மாணவர்களைக் கொண்டு இருசக்கர வாகனப் பேரணி, மனித சங்கிலி, பெண்களுக்கு கோலப்போட்டிகள், மெகந்தி இடுதல் போட்டிகள் ஆகியன அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெற உள்ளது. மேலும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னனு விளம்பர வாகனத்தின் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த வாக்காளர்கள் அறிந்திடும் வகையில் குறும்படங்கள் மாவட்டத்திலுள்ள மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் திரையிடப்படுகிறது. அதன்படி, இன்று (10.03.2021) திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேலம்பாளையம் மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் தேர்தல் நாளான ஏப்ரல் 6 ஆம் தேதியை குறிக்கும் வகையிலும் மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ராட்சத பலூன் பறக்க விடப்பட்டுள்ளது. மேலும், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்காளர்களும் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் -2021 வருகின்ற 06.04.2021 நடைபெறுவதை முன்னிட்டு 100 சதவீதம் தவறாமல் வாக்களிக்குமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் திரு.க.சிவகுமார், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.ஜெகநாதன், திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர் திரு.வாசுகுமார், திருப்பூர் வடக்கு வட்டாட்சியர் திரு.ஜெகநாதன், அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**